# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 5 0 0 |
| 6 மாதம் | ரூ. 2 8 0 |
| தனிப்பிரதி | 0 1 6 |

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர் வாரத்தாள்

தனி இதழ் அணா 1¼
வெளிநாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 22
4—2—50 சனிக்கிழமை | வீச்சு 23


# தேன் சொட்டுகிறது சொற்களில்!

## தேள் கொட்டுகிறது செயலில்!

"வறுமை, வேலையின்மை, மடைமை, சமத்துவ மின்மை, சுரண்டல் முதலிய கேடுகள் களையப் பட்டு, தனது திறமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப வேலை கிடைக்கப் பெற்று, ஒவ்வொருவரும் சுகவாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த லட்சியம்தான், நாட்டுக்கு விடுதலையைத் தேடிக் கொடுத்தது; அகிம்சை முறையில் நடைபெற்ற புரட்சியின் பல கட்டங்களிலும் பங்கு கொண்டு பணியாற்ற இந்திய மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது."

"தொழிலைப் பரவலக்குதல், கூட்டுறவை ஏற்படுத்தல், தேவையான வரையில் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாத்தல் முதலிய தத்துவங்களை நிறைவேற்றல்.

"அனைவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கல்.

"அனைவருக்கும் போதுமான அளவு வாழ வசதி அளித்தல்.

"நேர்மைக்கும், மனிதப் பண்புக்குமேற்ற முறையில் தொழில் தருதல்.

"தகுதியானதும், முழு நிலையிலும் பணி தருதல்.

"எல்லாத் துறைகளிலும் மனித மேம்பாட்டை வளர்த்தல்.

"இன்னோரன்ன சிறப்புகளோடு கூடிய புதிய அமைப்பை அல்லது சமுதாயத்தைத் தோற்றுவிப்பது தான் நமது இலட்சியம்."

—அ. இ. காங்கிரஸ் காரியக் கமிட்டி.

வறுமை நீங்கி வளம் பெருக, வேலையின்மை மடிந்து வாழ்வு கிடைக்க, கல்லாமை தொலைந்து அறிவு அதிகரிக்க, உயர்வு தாழ்வு உருக்குலைந்து சமத்துவம் ஓங்க, சுரண்டல் சூன்யமாகி சுகராஜ்யம் அமைய, ஆங்கில ஏகாதிபத்யம் அழிக்கப் பட்டு சுயராஜ்யம் அமைக்கப் பட்டாக வேண்டும் என்று, ஆசைவார்த்தைகள் வீசப் பட்டன. எப்பாடு பட்டேனும் லட்சியபூமியை அடைந்தாக வேண்டும் என்று இத் துணைக்கண்டத்து மக்களும் தீர்மானித்துக் கொண்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் படை எண்ணிக்கையில் கூடியது. காங்கிரஸ் தலைவர்கள் காட்டிய வழியில் கண்ணை மூடிக்கொண்டு மக்கள்பின்தொடர்ந்தனர் ஏகாதிபத்தியத்தின் அரும்பெரும் சக்தியை அலட்சியப் படுத்தினர். சிறைச் சாலை என்ன செய்யும் என்று சங்கநாதம் செய்தனர். தூக்குமேடை விடுதலை முயற்சியைக் கருவறுத்துவிடுமோ என்று கர்ஜனை புரிந்தனர். போலீஸ்படை என்றாலே ஒரு கேலி, பட்டாளம் என்றாலே ஒரு கிண்டல், பரங்கியரைப் பார்த்தாலே ஒரு பதை பதைப்பு.

போர் போர் என்று அகிம்சைப் போர் புரிந்தனர், ஏகாதிபத்தியம் பணியும் வரையில் மக்கள். ஏகாதிபத்தியம் அகன்றது. நமது இன்னல் பலவும் அகலும் என்றும், அந்நாள் கூறிய பல ஆசைவார்த்தைகளும் அரங்கேறும் என்றும் மக்கள் அகமகிழ்ந்தனர். சுயராஜ்யம் இப்படி இருக்கும் அப்படி இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்துபார்த்துப்பார்த்துக்களிப்புக் கடலில் மூழ்கினர் மக்கள். ஆனால், மக்களுக்கு, எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. கனவு, கனவாகவே போய்விட்டதைக் காண்கிறார்கள். கிடைத்துள்ள சுயராஜ்யப் புனலில் நீராடி மகிழ்வோர் வேறு எவர் எவராகவோ இருப்பதைக் காண்கிறார்கள். அந்தப் புனல் நீரைப் பருகிப் பரமானந்தப் படுவோர், விடுதலைப் படை வீறிட்டுப் போரிட்ட காலத்தில், அதனைக் கிண்டல் செய்து காட்டிக்கொடுத்த கண்ணியவான்களாக இருப்பதைப் பார்க்கிறார்கள். சுயராஜ்யப் பூங்காவின் நறுமணத்தை நுகர்வோரும், அங்கு தங்கி இளைப்பாறுவோரும், கொஞ்சிக் குலாவுவோரும், சுதந்திரப் போரில் பங்கெடுத்துக் கொள்ளாத சுயநலச் சுரண்டல் சொரூபங்களாக இருப்பதைக் காண்கின்ற மக்களின் மனம் வேதனை அடைகிறது. சுயராஜ்ய பழமுதிர் சோலையில் காய்த்துத் தொங்கும் நானாவிதமான கனிவர்க்கங்களையும், களங்காணாத கனங்கள் தின்று கொழுப்பதைக் காண்கின்ற மக்களின் கண்கள் செந்நீர் சொரிகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்புப் படையை நடத்திச் சென்ற தளபதிகள், சுயராஜ்ய புனல்—பூங்கா—பழமுதிர் சோலைக்கு முள்வேலியாக அமைந்திருப்பதோடு, படைவீரர்கள் அதன் அருகிலும் நெருங்க முடியாத நிலையில் காவல் காத்து நிற்கும் கருத்தழிந்த காரியத்தையும் மக்கள் காண்கிறார்கள். மக்களின் கருத்து குழம்புகிறது. சிந்தனையில் சீற்றம் பிறக்கிறது. தளபதிகளைப் போற்றின நா தூற்றல் பாணத்தைப் பொழிகிறது, ஆசீர்வாதம் சாபமாக மாறுகிறது. சஞ்சலம்—சலிப்பு அதிகரிக்கிறது. சன்மார்க்கம் தலைசாய்கிறது. சாந்தி விலகுகிறது. கொந்தளிப்பு பெருகுகிறது. காங்கிரஸ் ஆளவந்தார்களின் போக்கும், நாட்டுமக்களின் நினைப்பும் இந்தத் தன்மையில்தான் இருக்கிறது இன்று.

இந்த அலங்கோலத்தை நன்கு அறிந்துகொண்டுள்ள காங்கிரஸ் காரியககமிட்டியினர் — காங்கிரஸ் மேலிடத்தினர் — காங்கிரஸ் ஆளவந்தார்கள்—மேலும் சில ஆசை வார்த்தைகளை மக்கள்முன் வீசி எறிகின்றனர். மக்களுக்குள்ள ஆத்திரத்தைக் கொஞ்சம் மட்டந்தட்டி, அவநம்பிக்கையைக் கொஞ்சம் அகற்றி, தங்களை மீண்டும் நம்புமாறு மக்களைத் தூண்ட, மோகன சொற்களை வலையாக்கி வீசிப்பார்க்கிறார்கள். வெற்றி கிடைக்குமோ, மக்களின் வெறுப்பு அதிகரிக்குமோ என்பதை இதற்குள் தீர்மானித்துவிட முடியாது. பூஜா மனோபாவத்தின் நடமாடும் சின்னங்கள் அல்லவா நமது மக்கள்!

புதியதோர் ஏற்பாட்டை — சமுதாயத்தை நேர்மையான முறையில் அமைக்கப்போகிறார்களாம் காங்கிரஸ் மேலிடத்தார். அந்தப் புதிய ஏற்பாட்டில், தொழில் பரவலாகுமாம், கூட்டுறவு முறைக்கு ஏற்றமிருக்குமாம், தேவையான அளவுக்குத் தனி நபர் சுதந்திரம் பாதுகாக்கப்படுமாம். வேற்றுமை காட்டாமல் எல்லோருக்கும் சமமான வாய்ப்பளிக்கப்படுமாம். எல்லோருக்கும் போதுமான அளவு வாழ வசதி செய்து தரப்படுமாம், மிருகம்போல் பாடுபடும் கொடுமை நீக்கப்படுமாம். சக்திக்கேற்ற முறையிலும் முழு நேரமும் உழைக்க உத்திரவாதம் தரப்படுமாம். மக்களிடத்தில் மக்கள் தன்மைமலருவதற்கான மார்க்கம் காணப்படுமாம்.

குறுகிய காலத்துக்குள் அனைவருக்கும் வாழ்க்கைத்தரம் படிப்படியே உயர்ந்துவரும் முறையில் உற்பத்தி பெருக ஏற்பாடு உண்டாம். நாட்டில் உள்ள எல்லா உற்பத்திச் சாதனங்களும், முழுமக்கள் சக்தியும் பயன் படுத்தப்படுமாம், உழைக்கும் ஆற்றல் ஒன்றுக்குப் பலவாகப் பெருக்கப்படுமாம். உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்புக்கும், போதுமான அளவு வாழ்க்கைத்தர உயர்வுக்கும் ஏற்ற முறையில்தேசிய வட்டார சுயதேவை பூர்த்தி செய்யப்படுமாம். இதற்கான ஒரு குழு அமைக்கப்படுமாம். அதில் நிபுணர்கள் இருப்பார்களாம். நல்ல அனுபவம் உடையவர்கள் ஆவார்களாம். ஆலை அரசர்கள்தானே இதற்கான அனுபவம் உடையவர்கள்!

தேன் சொட்டுகிறது இந்தத் திட்டத்தில். திட்டத்தைக் கேட்டாலும், ஒரு முறை படித்துப் பார்த்தாலும் அனைவரின் உள்ளமும் பூரிப்படையும் என்பதிலும் சந்தேகமில்லை. சில அவசரக்காரர்கள், இத்திட்டத்தைக்கண்டு களிநடம் செய்வர் என்பதிலும் ஆட்சேபணையில்லை. சில காங்கிரஸ் கனவான்கள் மாற்றுக் கோட்பாட்டினரை, இதனை வைத்துக்கொண்டு மல்லுக்கிழுப்பர் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான். எல்லாம் சரி. ஆனால், திட்டம் நிறைவேற்றப்படுமா? திட்டத்தால், எதிர்பார்க்கப்படும் எல்லா நலன்களும் அனைவருக்கும் கிடைக்குமா? திட்டம் நேர்மையானதுதானா? இன்றுள்ள இக்கேடான சமுதாயத்தை மாற்றிப் புதியதோர் சமுதாயத்தை ஏற்படுத்த இந்தத் திட்டத்தில் இடமிருக்கிறதா? என்பனபோன்ற கேள்விகள் கிளம்புவது நியாயமானதாகும். கேள்வி கேட்கப்படுவதும், நேர்மையான பதிலை எதிர்பார்ப்பதும், உண்மையான மக்களாட்சி முறையின் மாண்பாகும். பொதுவாகக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் குறிப்பாகக் காங்கிரஸ் மேலிடத்தாருக்கும்— ஆளவந்தார்களுக்கும், மக்களாட்சிக் கோட்பாட்டிற்கும் நெடுநாள் பகையாக இருந்தாலன்றி, இந்த நேர்மையான கேள்விகளைக் கண்டு கோபம் பிறக்கக் காரணம் இல்லை. ஆனால், காங்கிரஸ் மேலிடத்தார், தங்கள் வாழ்நாளில் ஒருநாளாவது மக்களாட்சி இருக்கும் திக்கு நோக்கியும் பார்த்தறியாதவர்கள். கட்டளை இட்டும்—கர்ஜனை புரிந்தும்—பழகிவந்தவர்களேயன்றி பலருடன் கலந்துபேசி, தெளிவு பெற்று, செயலாற்றியவர்கள் அல்லர். இந்தப் போக்கு சர்வாதிகாரப்போக்கு. இதில் மக்களாட்சி மணம் இருக்காது. பலநாள பழக்கத்தை நினைத்த மாத்திரத்தில் விட்டொழித்துவிட முடியாது. முயற்சித்தாலும் வெற்றி சுலபத்தில் கிட்டாது.

இன்றுள்ள நமது சமுதாய அமைப்பு, செப்பனிட முடியாத அளவுக்குச் சரிந்துபோய் கிடக்கிறது. சமுதாயக் கட்டிடம் சீர்செய்ய முடியாத நிலையில் கலஞ்கிப்போயிருக்கிறது. அடியோடு தகர்த்தெறிந்துவிட்டு, புதியதோர்

(5-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குக் கிடைத்து விட்டது உண்மைதான். இன்றைய உலக நிலையில் அரசியலில் விடுதலை பெறுவது மட்டுமே போதாது, மக்களுக்கு சுகவாழ்வு அளிக்கவும், உண்மையான நல்ல பலன் அளிக்கக்கூடிய மக்களாட்சியை நிறுவவும், ஆட்சிபீடத்தில் அமருகிறவர்கள் ஏழையின் அரசியல் கற்றவர்களாக இருத்தல் வேண்டியதுமிகமிக முக்கியமானதாகும். அந்த நல்ல நிலை ஏற்படாதவரையில் மக்களின் விடுதலைப்பயணம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும்-இருக்கவேண்டும்.

இந்தோனேஷ்யாவில் டச்சுக்காரர்களின்மூலதனமும், டாலர் மூலதனமும் ஏற்கனவே தகரச்சுரங்கத்திலும் வேறு தொழில்களிலும் பதுங்கிக்கொண்டு இருக்கிறது. புதிதாக வேறு இந்தியாவின் மூலதனமும் நேசவாலை ரூபத்தில் உருவாகி இருக்கிறது. இவைகளுக்கும் ஏதாவது ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்த இந்தோனேஷ்ய குடியரசு தவறிவிடுமேயானால், அரசியல் விடுதலை வெறும் விளம்பர விடுதலையாகவே மதிக்கப் பட்டுவிடும்.

வெஸ்டர்லிங்கின் விபரீதத்தைக் காரணம் காட்டி, இந்தோனேஷ்யாவும் தனது இராணுவ பலத்தை விரிவாக்க ஆசை கொள்ளலாம். அந்த ஆசை அழிவைத்தான் அந்த நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கும். இராணுவத்தைப் பெரிதாக்க நினைத்தால், அதற்கான துணையை வேண்டி அமெரிக்காவின் காலடியில் தான் விழுந்தாக வேண்டும் இந்தோனேஷ்யா. அந்த வாய்ப்பைஅமெரிக்காவும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்துவிடப் போவதில்லை. இதனால், இந்தோனேஷ்யா மீது இன்னொரு டாலர் பிடி, மேலும் பலம்பெற வழி ஏற்படும். இந்த வெறுக்கத்தக்க நிலை இந்தோனேஷ்யாவிற்கு சம்பவிக்குமானால், இதற்கு முழுதும் பொறுப்பாளிகளான, இன்று ஆடம்பரத்தோடு பவனி வரும் அரசியல் தலைவர்களை, அந்த நாட்டு மக்கள் வெறுக்கவே செய்வார்கள். அந்த நிலையில் விடுதலை முழக்கம் வேறு பாதையில் சென்றுவிடும். போற்றுதல் தூற்றுதலாக மாறும். மலர்மாலை மரணமாலையாகும், இதனை விளக்கும் கலங்கரை விளக்கம்தான் சியாங்-கே-ஷேக் சம்பவம்.

* * *

இங்கிலாந்திலே சமதர்ம அரசு. மலாயாவிலே ஏகாதிபத்திய முரசு. உள்நாட்டிலே சுரண்டல் ஒழிப்புத் திட்டம் மலாயாவிலே சுரண்டல் வளர்ப்பு ஆக்கம். ஒரே உள்ளத்தில் இடம்பெற்று இருக்கிறது இந்த இருமுரண்பட்டக் கோட்பாடுகளும். இந்த முரண்பட்ட செயல்களுக்குக் காரணம் ஆயிரம் காட்டலாம். நேர்மை, அக்காரணங்களில் இலைமறை காயாகக்கூட இருக்க முடியாது. மலாயாவிலே இருப்பவர்களில் பெரும்பாலோர் சீனமக்கள். அடுத்தவர் தமிழர். எண்ணிக்கையில் கடைசியில் இருப்பவர்கள் தான் மலாய் மக்கள். அங்குள்ள தகரச் சுரங்கங்களையும், இரப்பர் காடுகளையும் பிரிட்டிஷ் முதலாளிகள் சுரண்டிக் கொண்டு இருக்கிறார்கள். இதனைக் காத்து நிற்கிறது, என்றும்போல், இங்கிலாந்து தொழில் அரசு!

போர்முடிந்தது முதல் அங்கு குழப்பம். ‘கொள்ளைக்காரர்கள்’ என்று ஆத்திரத்தோடு அழைக்கிறது, மக்களுக்கு நல்வாழ்வு கேட்போரை! அவர்களை அழித்துவிட எவ்வளவோ முயன்றும், முயற்சியில் வெற்றி ஏற்படாத நிலையிலும், மேலும் அதே பணிபுரிய திட்டமிட்டிருக்கிறது ஆங்கில அரசு. இந்தியாவின் பட்டாளம் கூட மலாயாவில் ‘கொள்ளைக்காரர்’களின் கொட்டத்தை அடக்கமுயன்று கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் இந்தியாவின் போக்கில் மாற்றம் இருந்தாலும் இருக்கலாம்.

அங்கு சீனமக்கள் தொகை அதிகம் என்று கூறினோம். அங்குள்ள சீனமக்களைக் குறித்து, சியாங்கிற்குத்தான் அக்கறை காட்ட அவகாசம் கிடைக்காமல் போய்விட்ட போதிலும், தூய உள்ளம் இல்லாமல் இருந்துவிட்ட போதிலும், இனி மா-சே-துங்குக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றோ, விரிந்த உள்ளம் இராது என்றோ கூற முடியாது. மாலாயாவிலுள்ள சீனமக்களைக் குறித்துக் கண்டிப்பாகக் கேள்வியை எழுப்புவார் மா-சே-துங். டாலர் அங்கீகரிக்க மறுத்த நிலையிலும், கம்யூனிஸ்ட் சீனாவை இங்கிலாந்து ஒப்புக் கொண்டதை, மலாயாவிலுள்ள சீன மக்களை சுட்டுப் பொசுக்க இங்கிலாந்தால் ஒரு வாய்ப்பாகக்கொள்ள முடியாது. நமது தமிழர்களை ‘நடுத்தெரு நாராயணன்’ தான் காப்பாற்ற வேண்டும்!

* * *

விசித்திரமானதோர் நாடு பர்மா. அந்த நாட்டுச் சுதந்தரவிழாவின் ஆரவாரம் அடங்குவதற்கு முன்பே, ஆங்கிலேய அரசின் இராஜதந்திரம் அங்கு, தன் வஞ்சக வலையை விரிக்கத் தொடங்கிவிட்டது. காமன்வெல்த் என்று பெருமையாகப் பேசிக் கொள்ளப்படுகிற ஆங்கிலேய சிறப்பணியிலும் பர்மாவைச் சேரவிடாமலே வைத்துக்கொண்டு இருக்கிறது இங்கிலாந்து. பர்மாவே தன்னிச்சை

(10-ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் பாதையில்....?

நாற்பது கோடி மக்களுக்கு அதிகமாகக் கொண்ட பெரும் நிலப்பரப்பான சீனா, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்தும் டாலர் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டது ஏகாதிபத்தியங்களின் எடுபிடியாக இருந்து, சொந்தமக்களின் சுகதுக்கங்களைப் பொருட்படுத்தாது, கொடுங்கோல் நடத்தி வந்த சியாங்-கே-ஷேக் சீனத்தீவான பார்மோசாவில் தங்கி இருக்கிறான்.

மக்கள் அன்பைப் பறிகொடுத்தான், நகரங்களை இழந்தான், நாட்டைத் துறந்தான், கவுரவம் தொலைந்தது, கண்ணியம் மறைந்தது, இவ்வளவு அலங்கோலங்களுக்குப் பின்னரும் அவனுக்குள்ள அதிகார வெறியும், ஆணவப்போக்கும் குறைந்ததாகக் காணோம். மீண்டும் சீனாவின் முடி சூடா மன்னனாகக் கோலோச்சலாம் என்னும் பேராசை கொண்டு புத்தி பேதலித்து இருக்கிறான். டாலர் ஏகாதிபத்தியம் தரும் போர்க் கருவிகளின் துணைகொண்டு, தனது அக்கிரம ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று விட்ட சீனநகரங்கள் மீது குண்டு வீசி, சீனமக்களை சித்ரவதை செய்து, நாசத்தைத் தூவிக் கொண்டு இருக்கிறான். சியாங்-கே-ஷேக்கால் சீனமக்கள் அன்றும் அழிவைத்தான், அவனை ஆதரித்ததற்காகப் பெற்று வந்தார்கள், இன்றும் அதே பரிசைத்தான் பெற்று வருகிறார்கள். சியாங்கின் இந்தப்பழிவாங்கும் நாசநடவடிக்கையினால், சீனமக்களின் சீற்றம் பெருக வழி ஏற்படுமேயன்றி, சியாங்கிற்கு என்றென்றும் ஆதரவு கிடைக்கப் போவதில்லை. பதவி மோகம், சியாங்கை இந்தப்பாடு படுத்துகிறது.

அதிகார மோகத்தின் விளைவாக சியாங்கிற்கு எந்த அளவு மூளை குழம்பிப் போயிருக்கிறதோ, அந்த அளவிற்குக் கொள்ளைலாப வேட்டையின் விளைவாக அமெரிக்காவிற்கும் மூளைக்கோளாறு ஏற்பட்டு இருக்கிறது. கோடிக்கணக்கான டாலர்களுக்கு யுத்த தளவாடங்களை உதவி செய்தும் கூட சியாங்கின் தோல்வியைத் தடுக்க முடியாமல் போய்விட்டு இருக்க, சியாங் நாடோடியாக நின்றுவிட்ட நிலையிலும் போர்க் கருவிகளைக் கொடுத்து உதவுவதால் கோரிய பலன் கிடைக்குமா என்று சிந்திக்கும் சீரை இழந்து இருக்கிறது அமெரிக்கா. சியாங்கிற்குப் பதவிவெறி என்றால், அமெரிக்காவிற்கோ எப்படியாவது தனது சுரண்டலை நடத்தியாக வேண்டுமே என்ற பெருங்கவலை! எனவே, புறமுதுகிட்டு ஓடுகிறவனுக்கும் போர்க் கருவிகளைக் கொடுத்துப் போர் வீரனாக்கிப் பூரிக்கிறது அமெரிக்கா!

சியாங்கின் தர்பார் பார்மோசா தீவிலும் மேலும் அதிக நாள் நீடிக்காது என்றே திட்டவட்டமாகக் கூறலாம். சியாங்கை நிர்வாண கோலமாக்கும் முடிந்த போரை ஆரம்பிப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் துரிதமாகச் செய்யப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது. மா-சோ-துங்கின் பத்துலட்சம் துருப்புகள் அணிவகுத்து நிற்கின்றனவாம் பார்மோசா மீது பாய. வெற்றி அத்துருப்புகளுக்குத்தான் என்று கூறுவது வெறும் ஆரூடம் அல்ல; அனுபவ உண்மையாகும். தன்னையும், தனது காதல் கணவரையும் இறுதியாக ஏற்றிச் செல்ல ஆகாய விமானத்தைத் தயாரிக்கும் முழுப்பொறுப்பையும் சியாங் மனைவியார் மேற்கொண்டிருக்கிறார் என்ற விஷயம் செய்திரூபமாகக் கிடைக்கவில்லையேயன்றி, காண்டன் நகருக்காக நடைபெற்ற போரில், அந்த நகரம் கம்யூனிஸ்ட் வசம் சிக்குவதாக இருந்தால், தமது கணவரை பத்திரமான இடத்துக்கு ஆகாயவிமான மூலம் கொண்டு சேர்த்துவிட வேண்டுமென்று நம்பிக்கையானவர்களிடம் கட்டளை பிறப்பித்திருந்த சியாங் மனைவியார், அதேபோன்ற ஒரு ஏற்பாட்டை இந்த நெருக்கடியான கட்டத்தில் செய்து கொண்டு இராமல் இருப்பார்களா!

* * *

மா-சோ-துங், திபெத் சர்க்காருக்கும் தாக்கீது பிறப்பித்திருக்கிறார், திபெத் சீனாவின் ஒரு பகுதி என்பதை விளக்கி. சீனாவின் அனுமதி இல்லாமல், திபெத் சர்க்கார் தமது பிரதிநிதிகளை நல்லெண்ணத் தூதுவர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதை ஒப்புக்கொள்ள முடியாது என்றும் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார். திபெத் தலைநகரான லாசாவிலுள்ள ஆளும் வர்க்கத்தினருக்கு, திபெத் விடுதலை பெறவும், சீனாவுடன் இணைந்துவிடவும் ஆவன செய்யும் மக்கள் பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று பிக்கிங் ரேடியோ ஒலிபரப்பி இருக்கிறதாம். குறுகிய காலத்தில் திபெத் பகுதியும் சீனாவுடன் இணைந்து விட வேண்டியது தான்.

* * *

ஆசியப் பகுதிகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் வளத்தை, பிரஞ்சு ஏகாதிபத்தியம் காண மறுக்கிறது தனது முன்னுள் சுரண்டல் போக்கை மாற்றிக் கொள்ளவும் தயங்குகிறது. மக்களின் சுதந்திர எழுச்சியை இராணுவ பலத்தால் அழித்து விடவும் முந்துகிறது. யாராவது ஒரு அனுமதேயத்தைப் பிடித்து, இவரை ஆட்சியாளராக ஏற்றுக்கொள்ளுங்கள் இவருக்கு மக்கள் ஆதரவு ஏராளமாகஇருக்கிறது, என்று பகட்டாக விளம்பரப்படுத்துகிறது. சீனாவை ஒட்டியுள்ள வியத்நாம் பகுதியில், ஹோ-சி-மின் தலைமையில் அந்த நாட்டு மக்கள் ஒன்று திரண்டு, பிரஞ்சு ஏகாதிபத்தியத்தைத் திணர அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். வியத்நாம் மக்களின் விடுதலை எழுச்சிக்கு முன்னால், தாம் திக்குமுக்காடவேண்டியிருப்பதைச் செயலளவில் கண்டும் கூட பிரெஞ்சு ஏகாதிபத்தியம், பாவோடாய் என்ற ஒருஅப்பாவி முடிதாங்கி மனிதரைப் பிடித்து, அவரை ஆட்சித்தலைவர் என்று அழைத்து, அதற்கு மற்ற அரசுகளின் ஒப்பந்தத்தைப் பெற ஊக்கத்தோடு பாடுபடுகிறது. துருப்புகள் தோற்றுப்போன இடத்தில் இராஜ தந்திரம் என்னும் வஞ்சகம் விளையாட ஆரம்பித்திருக்கிறது.

வியத்நாமிலுள்ள ஹோ-சி-மின் சர்க்காரை, செவப்பு சீனா, சட்டபடி அமைந்த சர்க்கார் என்று ஏற்றுக்கொண்டு விட்டது. இதனையொட்டி சோவியத் ரஷ்யாவும் ஆதரவு காட்டி விட்டது வியத்நாமுக்கு. ஹோ-சி-மின் குடியரசின் கோட்பாடு மேலும் அதிதீவிரமானதாக மாறிவிடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. வியத்நாமுக்கும் செவப்புச் சாயம் தீட்டவேண்டியதாக ஏற்பட்டுவிட்டால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. வியத்நாம பிரதேசத்தோடு விடுதலைக் கிளர்ச்சி நின்றுவிடாது. மற்ற இந்தோசீனப் பகுதிகளுக்கும், அக்கிளர்ச்சி காட்டுத் தீப் போல பரவித்தான் தீரும்

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் தயாரித்துள்ள 'குடியேற்றநாட்டு அந்தஸ்து' என்றபுதிய அமைப்பின்படி பழைய இந்தோசீனா மூன்று சுயேச்சை வட்டாரங்களாகப் பிரிக்கப்படுகின்றன. சீனாவை ஒட்டியிருக்கும கிழக்குக் கடற்கரையோரமாக உள்ள நிலப்பரப்பான **வியத்நாமுக்கு** முன்னாள் சக்ரவாத்தியான **பாவோ டாய்** ஆட்சித் தலைவர் ஆவார். **ஸ்ரீ அனு** என்னும் மன்னர் தலைமையில் **கம்போடியா** பிரதேசத்தின் அதிகாரமும், **ஸ்ரீயவாங் வாங்** தலைமையில் **லாவே** வட்டாரமும் ஒப்படைக்கப் படுகிறது. யார் யார் ஆட்சித் தலைவர்களாக இருப்பது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளும் பொறுப்பு, அந்தந்த வட்டார மக்களுக்கு வழங்கப்பட வேண்டியதே மக்களாட்சிக் கோட்பாடாக இருக்க, அந்தச் சாதாரண முறையைக் கூட பிரெஞ்சு ஏகாதிபத்தியம் மறந்து, ராணுவத்தால் தனது நல்ல பிள்ளைகளை அரியாசனத்தில் அமர்த்த ஆசைகொள்ளுகிறது! இதற்குப் பெயர் குடியேற்ற நாட்டு அந்தஸ்தாம்! எத்தனை காலைக்குத்தான், துப்பாக்கி முனையால், அதுவும் அதிகாரம் செலுத்தத் துளியும் உரிமை இல்லாத அன்னியர்கள், ஒரு நாட்டின் அரசியல் பீடத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு இருக்க முடியும்?

* * *

விவசாயத்தையே நம்பி வாழுகின்ற **தாய்லாந்தில்** அதிகாரத்தில் இருப்பவர்களைக் கவிழ்த்து விட்டு,இராணுவத்தினர் ஆட்சிப் பீடம் ஏற முயன்றதாகவும், முயற்சியின் துவக்கத்திலேயே ஒடுக்கப் பட்டதாகவும் ஓர் செய்திகூறுகிறது. அண்டைநாடுகளான சீனாவும், வியத்நாமும் விடுதலை வழியில் வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கின்ற பொழுது, தாய்லாந்து மக்கள் உள்ளதில் மட்டும், புது நிலை பெறவேண்டும் என்ற உணர்வு புகாமலா இருக்க முடியும். அப்புதுணர்வு தரத்திலே மாற்றுக் குறைந்ததாக இருக்கலாமே ஒழிய, விழிப்புணர்ச்சியின் அளவிலே குறைவிருக்க முடியாதே.

* * *

**இந்தோநேஷ்யா** விற்கு தேசிய விடுதலை கிடைத்து விட்டது. டச்சு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் **நியூகினியாவில்** இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது அதற்கு என்று முடிவேற்படுமோ தெரியவில்லை. இந்தோநேஷ்யாவின் தலைநகரான பாடிவ்யாவை நோக்கி படையெடுத்தானாம் தளபதி **வெஸ்டர்லிங்** என்ற டச்சு வீணன். அவன் படையின் நடை எழுப்பிய அதிர்ச்சியிலே இந்தோநேஷ்ய குடியரசுப் படை பஞ்சாய்ப்பறந்து போய்விட்டதாம். பழுக்கக்காய்ச்சிய கத்தி வெண்ணெயில் பட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்ததாம் அந்தக்காட்சி. தலைநகரையும் கைப்பற்றிக் கொள்வதற்கான படைபலம் அவனுக்கு இருக்கிறதாம். இந்தோநேஷ்யக் குடியரசுப் படையினர் டச்சு ஆதிக்கத்திலுள்ள நியூகினியாவைக் கைப்பற்ற ரகசியத்தில் ஏற்பாடு செய்துக் கொண்டு இருக்கிறார்களாம். அதனை அறிந்து கொண்டதின் பலனாகத்தான் இந்தப்படையெடுப்பு ஒத்திகையாம். நிற்க.

அரசியல் சுதந்திரம் அந்த

(3-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்!

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 22
4—2—50 சனிக்கிழமை

## தலைவர் பேசிவிட்டார்!

31-1-50-ல் இந்தியக் குடியரசு பார்லிமெண்டில், குடியரசின் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், புதிய அரசியல் அமைப்பின்படி, விரிவானதோர் சொற்பொழிவைப் புரிந்திருக்கிறார். அவரோ ஒரு வழக்கறிஞர். தம் தொழில் துறையிலும் சரி, அரசியல்வாழ்விலும் சரி, மணிக் கணக்கில் பேசுவதையே பெரும் பணியாகக் கொண்டிருந்தவர், குடியரசின் தலைவர் என்ற முறையிலும் ஒரே மூச்சாக, விரிவான பேச்சுப் பேசி இருப்பதில் வியப்பொன்றுமில்லை. தலைவர் போன்றோரிடம் எதிர்பார்க்கக் கூடிய சீரிய செயலும் அது ஒன்றே ஒன்றுதான்.

இரண்டரை ஆண்டாகக் காங்கிரஸ் ஆட்சியினர் ஆட்சிபுரிந்த "அரிய" செயலினை, ஒருவரலாற்று ஆசிரியரைப்போல, ஒரு நிகழ்ச்சியும் தவறிவிடாமல், விளக்கமாகக் குறித்துக் காட்டியுள்ளார். காந்தீயத்தைத் துதிசெய்வதில் துவங்கி, அக்கோட்பாட்டிற்கு நேர் முரணான மிருகபலத்தைப் போற்றிப்புகழும் கூட்டம் வரையில் பேசியுள்ளார் பெருந்தலைவர். காந்தீயப் பாதைக்குப் புகழ்மாலை சுற்றியுள்ளார் அமைதியை நிலைநாட்டுவது குறித்து அழகுபடக் கூறியுள்ளார். காமன்வெல்த்கூட்டுறவைச்சிறப்பித்துள்ளார். உலக நாடுகள் அனைத்திலும் இந்தியத் தூதுவர்கள் கொலுவீற்றிருப்பதைப் பாராட்டியுள்ளார். அப்கானிஸ்தானுடன் இந்தியா ஒப்பந்தம் [illegible] தலோர் செயலாகச் சித்தரித்துள்ளார். புதிய சீனாவுக்கு ஒப்பம் அளித்துள்ளதை உயர்ந்த கோட்பாடு என்று சுட்டிக் காட்டியுள்ளார். ஆசியாவில் நமக்குள்ள அந்தஸ்து எத்தகையது என்பதை எடுத்தோதியுள்ளார். அமெரிக்காவிற்குரிய மரியாதை காட்டியுள்ளார். பரம்பரைப் பகை எவரிடத்திலும் கிடையாது என்று உறுதி கூறியுள்ளார்.

அகதிகள் பிரச்னை தீர்க்கப்பட்டிருந்தபோதிலும், மேலும் பெரிய அளவில் தீர்க்கப்பட வேண்டி இருக்கிறது என்று எடுத்துக் காட்டியுள்ளார். பஞ்சத் தவிர்ப்புக்கும், பட்டினி ஒழிப்பிற்கும், பிணி நீக்கிற்கும், கல்விப் பெருக்கிற்கும் தொழில் வளர்ச்சிக்கும், செல்வச் செழுமைக்கும் உண்டாம், எண்ணத்தில் — எழுத்தில் திட்டங்கள்!

பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்கும் இருக்கும் மனக் கசப்பையும் போக்கவேண்டுமென்று பேசியுள்ளார் குடியரசின் தனித்தலைவர். ஆம். இந்தப் பகையுணர்ச்சி மேலும் மேலும் வளர்ந்து வரக்கூடாதுதான். இரு நாடுகளுக்கும் பகை வளர வளர முடிவு பெரும் போராகத்தான் முடியும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. போர், விரும்பக்கூடாத ஒரு கொடு நஞ்சாகும். அதனை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கவேண்டும். தவறிவிட்டனர், இருநாட்டின் ஆட்சிப் பீடத்திலும் அமர்ந்திருக்கும் அன்பர்கள்.

இரு நாட்டுக்கும் இடையே இன்று இருந்து வரும் விரோதத்தால், ஏற்கனவே இருநாட்டின் மக்களுக்கும் இருந்துவரும் சங்கடங்கள், கூடுதலாகின்றனவே ஒழிய வேறொன்றுமில்லை. இதனால், இருக்கும் கஷ்டங்களையே தக்கமுறையில் பரிகரிக்க முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கும் இருநாட்டின் ஆட்சியாளர்கட்கும், மேலும் தொல்லைகள் பெருகத்தான் பெருகும். இரு நாடுகளுக்கும் நட்புணர்ச்சி வளருகின்ற முறையில், நெருக்கடிகளுக்கு இருப்பிடமாக உள்ள பிரச்னைகள் பலவற்றிலும் இருநாட்டுத் தலைவர்களும் ஒன்று கூடிக் கலந்துபேசி, நேர்மையான முறையில் தீர்த்துக் கொள்வதே சிறந்த ஏற்பாடாகும் ஆப்கானிஸ்தானுடன் நல்லுறவு ஒப்பந்தம் செய்து கொள்வதற்குத் தேவைப்பட்ட விரிந்த மனம், இந்தியாவிற்குத் தேவைப்படுகிறது பாகிஸ்தானுடன் ஒற்றுமை கொள்ள.

**"வரலாறு, கலாசாரம், மாற்ற முடியாத பூகோள அமைப்பு அனைத்தும் பாக்கிஸ்தானும் இந்தியாவும் நட்புரிமையோடு வாழ்வதையே வற்புறுத்துகிறது"** என்று தலைவர் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் பிரசாத் நினைப்பிலே வேண்டுமானால் இது சரியானதாக இருக்கலாம். ஆனால் நடைமுறை அவர் நம்பிக்கைக்கு நேர் விரோதமாக இருக்கிறது. எந்தக் 'கலாசாரம், வரலாறு' ஒற்றுமைக்கு வழிசெய்கிறதாகத் தலைவர் குறிப்பிடுகிறாரோ, அதே கலாசாரத்தையும் வரலாற்றையும் எடுத்துக் காட்டித்தான் பாக்கிஸ்தான் அரசு நிறுவப்பட்டிருக்கிறது என்பதை டாக்டரால் மறுத்துவிட முடியாது. டாக்டர் போற்றிப் புகழும் வரலாறும் கலாசாரமும் இந்தியத்

துணைக்கண்டத்தைத் துண்டாட உதவி செய்திருக்கிறதே ஒழிய, நட்பைக் கட்டிக் காக்கக் காதொடிந்த ஊசியளவும் பயன்படவில்லை. பாக்கிஸ்தான் ஏற்பட்டதற்கான, இந்த நடைமுறை உண்மையை, மறந்தோ — மறைத்தோ, அதே 'கலாசார— வரலாறு' கண்கொண்டு, இரு நாடுகளுக்கும் இருந்துவரும் பகைமையை நோக்குவது கூடாது—நல்ல பலன் இதனால் ஏற்படவும் படாது. நல்லது விளையவில்லையானாலும், மேலும் பகையாவது வளர வழி ஏற்படாமல் இருக்குமா என்று பார்த்தால், அதனையும் உறுதியாகக் கூற முடியாது. எனவே, கலாசாரப் பேச்சை எழுப்பிக் கொண்டு இருப்பதை உடனடியாக விட்டொழித்து, பாக்கிஸ்தானில் உள்ளவர்களும் மக்கள் இந்தியாவில் உள்ளவர்களும் மக்கள் என்ற நம்பிக்கை பெற்று சாதாரண மனிதக் கண்கொண்டு பார்க்க வேண்டும் பிரச்னைகளை. அதுவும் போதாது நட்பை வளர்க்க காந்தியார் காட்டிய அகிம்சையை மேற்கொள்ள வேண்டுமேயன்றி, மிருக பலத்தின் ஒத்துழைப்பை நாடுவதும் கூடாது. பொதுவாகக் காங்கிரஸ்காரர்களும் குறிப்பாகக் குடியரசின் தலைவரும் காந்தீயத்தில் நம்பிக்கைக கொண்டிருப்பவர்கள் என்று பிறர் நம்பும் முறையில் பேசிவிடுவதால், நாம் காந்தீயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாகிறோம். ஏதோ சொல்லலங்காரத்திற்காகக் காந்தீய பாதைபற்றிப் பேசப்படுகிறது என்று கூறப்படுவதானால், அந்நிலையில், நாம், அதுபற்றி நினைக்கக்கூட மாட்டோம்.

குடியரசின் தலைவர் உரையிலே குறிப்பிடத் தகுந்ததும், நமக்கு மட்டுமல்ல-மற்று எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சிதரக் கூடியதுமான நல்லதோர் அம்சத்தைக் குறிப்பிட்டுள்ளார். இராணுவத்திற்காகும் செலவை **'கூடியமட்டும்'** இந்திய சர்க்கார் குறைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறதாம். 'கூடியமட்டும்' என்ற சொல்லை, நிபந்தனையாகப் போடப்பட்டிருப்பதால், எவரும் அதிகம் மகிழவோ- திருப்தி கொள்ளவோ நியாயமில்லை. 'இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும்' என்று தலைவர் கூறுவதிலிருந்து, இரு உண்மைகளை குடியரசு சர்க்கார் தெரிந்து கொண்டு இருக்கிறது என்பதையும், செலவைக் குறைக்க வேண்டும் என்று நினைப்பதையும். நாம் கேட்கின்ற பொழுதுதான் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த இரு உண்மைகள் என்ன?

ஒன்று—**அகிம்சை பேசி வந்தா நாம், ஆத்மசக்தி அணுசக்தியிலும் பலம் பொருந்தியது என்று கூறி வந்த நாம், ஆயுத பலத்தில் நம்பிக்கை வைத்து இராணுவத்துக்குச் செலவு செய்து வருவது அதர்மமானது—உலக நகைப்புக்கு இடமானது என்ற தார்மீக நினைப்பு**

இரண்டு:—**நாட்டு மக்கள் வறுமையால் துடிக்கும் பொழுது இராணுவபலத்தைப் பெருக்கிக் கொண்டு இருப்பது நியாயமற்றது.**

இந்த இரு காரணங்களையும், டெல்லி சர்க்கார் உணருகிறது என்பதை குடியரசுத் தலைவர் வாய் மூலமாக—வேறு சொற்களால் கேட்கப்படுகின்றபொழுது எவர்தான் மகிழாமல் இருப்பர். ஆனால், காந்தியத்தை சிறப்பித்துப் பேசுகின்ற எதிரொலி அடங்குமுன், இராணுவத்தின் இன்றியமையாமையையும், புகழ்ந்துரைக்கிறார் டாக்டர் பிரசாத்.

தலைவரின் பேச்சின் மீது எழுந்த விவாதத்தின் போது, தோழியர் கிருபலானி அவர்கள், **"இராணுவத்தினுடைய பலம் அதன் அளவைப் பொறுத்தில்லை மக்களின் நாட்டுப் பற்றையும், உற்சாகத்தையும், அற உணர்வையும் பொறுத்திருப்பதாகும்"** என்று எடுத்துக் கூறியுள்ளார் காங்கிரஸ் ஆளவந்தார்களின் சிந்தனைக்கும் தீர்ப்புக்கும் இதனை அர்ப்பணிக்கிறோம்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவ பலம் மட்டுமே இருந்தால் போதாது. நாட்டு மக்களிடம் சந்தோஷம் இருந்தாக வேண்டும். சந்தோஷம் வெறும் கவர்ச்சியான சொற்களால் மட்டுமே ஏற்படுத்தி விடக்கூடியதல்ல. உண்பதற்கு நல்லுணவும், உடுப்பதற்கு உடையும், குடியிருக்க நல்ல வீடும், பிணிபோக்க மருத்துவ வசதியும் எல்லா மக்களுக்கும் கிடைக்கச்செய்வதைப் பொறுத்துத்தான் மக்கள் உள்ளங்களிலே மகிழ்ச்சியும் பிறக்கும். அதில்தான் ஒரு நாட்டின் பாதுகாப்பும் அமைந்திருக்கிறது. மக்களின் நல்வாழ்வைத் தருவதற்காக செய்துக்கொள்ளப்படும் ஏற்பாட்டிற்குத்தான் அரசு என்ற பெயர் பொருந்துமேயல்லாமல், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள— இராணுவபலத்தைப்பெருக்கிக்கொள்ள ஆர்வம் காட்டும் ஒன்றுக்கு, அரசு என்ற பெயர் பொருந்தாது

கள்ள மார்க்கெட்டுக்காரர்களைப்பற்றின பேச்சில்லை. கொள்ளை லாபக்காரர்களைப் பற்றின மூச்சில்லை. தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து குறிப்பில்லை. முதலாளித்துவத்தின் முதலைத்தனத்தை முறியடிக்கும் முணுமுணுப்புக்கூட இல்லை தலைவரின் சொற்குறிப்பில்.

அமெரிக்காவைக் குறிப்பிட்டுப் பேசிய தலைவருக்கு, இங்கி

(10-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

இருபத்திரண்டாம் பகுதி

## கொக்கு மந்தாரை

வாளின் கூர்மையைத் தடவிப் பார்த்தபடி, குகையில்லத்தின் ஒரு பகுதியில் தூயமணி தனியாக உட்கார்ந்திருந்தான். ஆண்டுகள் இரண்டிற்கு மேலாகிவிட்டன அல்லவா அவன் கூர்வாளைத் தொட்டுப் பார்த்து? போர்வாளைத் தடவிப் பார்க்கப் பார்க்க அவன் முகத்தில் வீர உணர்ச்சி பொங்கி வழிந்தது! சேரமன்னனை மீட்கவும், சோழனை விரட்டி பாண்டிய நாட்டை விடுவிக்கவும் திட்டம் உருவாகி விட்டதினால், விரைவில் போர்க்களம் புகப் போவதை எண்ணிப் பூரித்தான். பாண்டிய இளவரசன் மகள் தேன்சுவையும், பாண்டிய இளவரசி மலர்க்கோதையும் காதலால் கட்டுண்டிருப்பதும், அடிக்கடி அவர்கள் சந்திப்பதும் அவன் நினைவிற்கு வந்தது! இளவரசி வஞ்சியை எப்பொழுது காணப்போகிறோம், பேரழகியின் தோள்தழுவி, பேரானந்தம் எப்பொழுது கொள்ளப் போகிறோம் என்றெண்ணி உள்ளம் சோர்ந்தான்!

மருதவாணனும் அவன் மகன் முல்லைவழுதியும் அங்கு வரவே, தூயமணி எழுந்து நின்றான்.

“உடைகளை ஆட்கள் தைத்துக் கொண்டிருக்கிறார்கள்! வேலை சரியாக நடக்கிறதா என்று நீ போய் பார்த்துக்கொண்டிரு! நானும் தூயமணியும் சிறிது வெளியே போய் விட்டு வருகிறோம்.” என்று மருதவாணன் கூறியதும், முல்லைவழுதி ஒரு அறையினுள் நுழைந்து சென்றான்.

வீரனும் கிழவனும் வெளியே புறப்பட்டனர். காட்டில் அவர்கள் பேசிக்கொண்டே மெதுவாக நடந்து சென்றனர்.

“வாடியிருக்கிறதே, ஏனப்பா, உன் முகம்? வஞ்சியின் நினைவா?”

“ஆமாம்! நம் திட்டத்திற்கு வஞ்சி இசைவாளோ இல்லையோ?”

“அவள் உள்ளம், காதல் உள்ளம்! கட்டுப் பட்டே தீரும்! இதைக் குறித்து உனக்குச் சிறிதும் ஐயம் வேண்டாம்!............ஆடிப்பார்த்தாயா?”

“நானும் முல்லைவழுதியும் இன்று காலை ஆடிப் பார்த்தோம், நன்றாக வருகிறது!”

“இன்னும் ஒரு மாதத்தில் தேவையான உடைகள் எல்லாம் தயாராகிவிடும்........”

‘அப்படி என்றால் அதற்கு அடுத்த மாதத்தில் சேரநாட்டின் கிராமங்களில் இருக்கப் போகிறோம் என்று சொல்லுங்கள்!”

“நானேன் சொல்லுகிறேன், வஞ்சிவந்து சொல்லப் போகிறாள்!” என்று மருதவாணன் கூறியதும் தூயமணி குறுநகை புரிந்தான்.

அருகே இருந்த ஒரு சிறிய மரத்திலிருந்து கிழவன் இரண்டு பழங்களைப் பறித்துக்கொண்டு வந்தான்!

“தம்பி! காஞ்சிரம் கனி என்பது இதன் பெயர்! பார்ப்பதற்கு இது எப்படி இருக்கிறது?”

“சிகப்பாக — கோணலில்லா உருண்டையாக— மிகவும் அழகாக இருக்கிறது!”

“அழகிய இந்தக் கனியைத் தின்னமுடியாது! ஒரே கசப்பு! இப்படி ஆகிவிடக் கூடாது நம் திட்டம்!”

இருவரும் நடந்தனர்! திடீரென்று கிழவனின் காலில் கல் படவே, இரத்தம் கசியத்தொடங்கியது.

“தம்பி, கொஞ்சம் காட்டெருமைப் பால் கொண்டு வா, ரத்தம் வருகிறது.”

“காட்டெருமைப் பாலா? காட்டெருமையை நான் எங்குப் போய்த் தேடுவது? கண்டாலும் பாலை எப்படிக் கறப்பது?”

மருதவாணன் சிரித்து விட்டு, ஒரு செடியின் அருகே போய் உட்கார்ந்து, அதன் இலைகளை ஒடித்து, வெளிவந்த பாலை எடுத்து காயத்தில் வைத்தான்!

“ஐயா, காட்டெருமைப்பாலைக் கேட்டுவிட்டு, எருக்கம் பாலை வைக்கிறீர்களே?’,

“எருக்கம் பாலுக்குத்தான் காட்டெருமைப் பால் என்பது, தம்பி!” என்று கூறி கிழவன் சிரித்தான்.

“ஐயா, சிற்பி முகிலன் காட்டியதாகச் சொன்னீர்களே, அந்த மூலிகைகளையும் மரம் செடிகொடிகளையும் எனக்கு இப்பொழுது காட்டுகிறீர்களா? போர்க்களம் புகுமுன்னர் அவைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் அவாவுகிறது! அத்துடன் குகை இல்லத்தின் அதிசயங்களையும்.................”

“சொல்கிறேன் தம்பி! இதோ இருக்கிறதே இதற்குக் குருக்கு அல்லது பிரமதண்டுச் செடி என்று பெயர். இதோ பார், இதன் இலையைக் கிள்ளினால் மஞ்சளாகப் பால் வருகிறதல்லவா? இந்தப் பாலைக் கொண்டு ஒரு சிறிய விளையாட்டுக் காட்டலாம்! நெற்றியிலோ அன்றி வேறு உறுப்புகளிலோ இந்தப் பாலினால் எதையாவது எழுத வேண்டும். பிறகு அது காய்ந்து விடும், காய்ந்ததும், எழுதியது மறைந்து விடும். வேடிக்கை பார்ப்பவர்களிடம், ‘பார், பார் முகத்தை நன்றாய்ப்பார்! ஒன்றுமில்லை அல்லவா? இப்பொழுது என் நெற்றியில் சேரநாடு வாழ்க என்று நீரைத் தெளித்து எழுதிக் காட்டுகிறேன் பார்!’ என்று கூறி நீரை நன்றாகத் தெளித்தால், பளிச்சென்று மஞ்சள் நிறத்தில் எழுத்துக்கள் தெரியும்!........”

“வேடிக்கையாகத்தான் இருக்கிறது!........”

“இன்னும் இப்படி ஏராளமானவை இருக்கின்றன! காய்ச்சிய

இரும்புச் சங்கிலியைக் கைகளால் உருவலாம்"

"எப்படி?"

"சோற்றுக் கற்றாழையையும் விளக்கெண்ணெயையும் சேர்த்துக் குழைத்துக் கையில் தடவிக் கொண்டு பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சங்கிலியை உருவலாம்! விரல்களின் வழியாக நெருப்புப் பற்றி எரியும்! பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயும் பயமாயுமிருக்கும்! நமக்குக் குளிர்ச்சியாகத் தான் இருக்கும்! இதையெல்லாம் நாம் ஆடப்போகும் கூத்தில் கலந்து செய்ய வேண்டும்! ஒரு சிறிய வாய் உள்ள புட்டி, அதில் ஒரு முட்டையை உள்ளே போட வேண்டும்! முடியுமா?"

"அதெப்படி முடியும்? உடைந்து விடாதா?"

"நாவற்பழச் சாற்றில் ஒரு நாள் வரைக்கும் முட்டையைப் போட்டு வைக்க வேண்டும்! பிறகு காய்ந்த ஆலம்பாலைப்போல, முட்டை மெது வாகிவிடும்! நம்விருப்பப்படி அதனை அழுத்தலாம், உடையாது! இப்படிப் பலபல வேடிக்கைகள் உள்ளன!"

இருவரும் சிறிது தூரத்திலிருந்த ஒரு சுனைக்குச் சென்று நீர் குடித்தனர் தூயமணியின் ஆசையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கிழவன் பேச ஆரம்பித்தான்!

"சுனைநீரில் மிதந்து கொண்டிருக்கும் இந்தச் சிறிய இலைகளைக் கொண்ட பூண்டிற்கு ஆகாசத் தாமரை என்று பெயர்! சுனையின் அருகே இதோ முளைத்திருக்கிறதே இதனைக் கல்லுக் கலைக்காத்தான் என்றும் தியாக்கீரை என்றும் சொல்வார்கள்! இது ஒரு சிறந்த கீரை இதனைச் சமைத்துச் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும், கண்களுக்கு மிகவும் குளிர்ச்சியை அளிக்கும்!"

இருவரும் சுனையை விட்டுப் புறப்பட்டனர். வழியில் கிழவன், காட்டு மல்லிகை, தேள் கொடுக்கு, கானனுசாரிஎன்று சொல்லும் நன்னாரிக்கொடி, அழுக்கெடுக்கும் புல்லான குச்சுப்புல், அரக்கு மஞ்சள், இக்கிரி, ஆள் வணங்கி என்னும் தொட்டால் வாடி, கிலு கிலுப்பைச் செடி, முதலிய பலவித செடி கொடி மரங்களைத் தூயமணிக்குக் காட்டினான்!

கடைசியாக ஒரு மரத்தின் அடியில் வந்து நின்றனர்.

"தம்பி! இம்மரத்தின் பெயர் கொக்கு மந்தாரை என்பது! அதன் பூக்கள் எவ்வளவு அழகாகவும் மணமாகவும் இருக்கின்றனபார்! இந்த மரத்தின் அடியில் பல நாட்கள் நானும் மூகிலனும் உட்கார்ந்து பேசியிருக்கிறோம்! தனியாகவும் நான்வந்து இந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து, சிந்திப்பது வழக்கம்! மலர்க்கோதையை எண்ணி இந்த மண்ணில் எவ்வளவோ நாட்கள் கண்ணீர் சிந்தியிருக்கிறேன்! சேர நாட்டைவிட்டு விரட்டப்பட்ட இந்த இருபது ஆண்டுகளில், இந்த மரத்தடியில் அநேகநாட்களைக் கழித்திருக்கிறேன்" என்று மருதவாணன் கூறிக்கொண்டே உட்கார்ந்தான். தூயமணியும் அருகில் அமர்ந்தான்.

"தூயமணி, இந்தக் கொக்கு மந்தாரை என் வாழ்வில் மறக்க முடியாத சில பொருள்களில் ஒன்று!.........குகை இல்லத்தின் இதயம்! ஆமாம் விளக்குகள் தானுக எரிந்த அதிசய அறை! அதனைப் பற்றிக் கூறுகிறேன்! பலஆண்டுகளுக்குமுன்னர் மலர்க்கோதையின் தாத்தா அரசாண்டு கொண்டிருந்தபோது சிங்கள மன்னனைப் போரில் வென்ருர்! அவனையும் அவன் மனைவியையும் இன்னும் சில ஆட்களையும் சிங்களத்திலிருந்து சிறைபிடித்து வந்தான், பாண்டியன்! சிறையிலிருந்த அவர்கள் எப்படியோ தப்பி, இந்தக் காடு வந்து சேர்ந்தனர். சிங்கள மன்னனோடு இருந்தவர்களில் கை தேர்ந்த சிற்பியும் ஒருவன்! அந்தச் சிற்பி மற்றவர்களின் சிறிய உதவியைக் கொண்டு இவ்வளவு அழகான குகை இல்லத்தைக் குடைந்தான்! தங்கத் தகட்டின் மீது மூன்று மண்டை ஓடுகள் வரிசையாக வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தாய் அல்லவா? அவற்றின் வலது புறத்தில் இருப்பது சிற்பியின் மண்டையோடு என்று கூறினேன் அல்லவா? அவன் தான் அந்தக் குகை இல்லத்தை ஏற்படுத்தியவன். நடுவிலுள்ளது, தோற்ற சிங்கள மன்னனின் மண்டையோடு; இடது புறத்தில் இருப்பது மன்னனின் ஆசை மனைவியின் மண்டையோடு!...................... மண்டையோடுகள் வைக்கப் பட்டிருக்கும் அந்த அறையின் அமைப்பே அலாதி ஆனது. அதனுள் சிறிது கூட காற்று நுழைய முடியாது.

கதவின் அமைப்பும் அப்படியே! அந்த இரண்டு விளக்குகளின் திரிகளும் பலவித மரப் பட்டைகளின் சாறியவை! அதன் பசை என்றும் காயாது! அந்தத் திரிக்கு அருகே "மஞ்சள் கொங்கம்" என்ற பெயர் கொண்ட ஒரு பொருள் வைக்கப் பட்டிருக்கிறது! மஞ்சள் கொங்கத்தின்மீது பிராண வாயு பட்டால் உடனே அது தீ பிடித்து எரியும். ஆகவே அதனை நீரிலே தான் வைத்துக் கொண்டிருப்பார்கள். கதவு திறந்ததும் திரியின் அருகே இருக்கும் மஞ்சள் கொங்கத்தின் மீது பிராண வாயு படுகிறது! உடனே அது எரியத் தொடங்குகிறது! அது எரிந்ததும் திரியும் எரிகிறது......... திரும்பவும் கதவு மூடியதும், அறையிலுள்ள நல்ல காற்று முழுவதும் ஆகிவிட்டதும் திரியும் மஞ்சள் கொங்கமும் தானுக அணைந்து விடுகின்றன!"

கொக்கு மந்தாரைப் பூக்களைப் பறித்துக் கொண்டு இருவரும், குகை இல்லத்திற்குத் திரும்பினர்.

முல்லை வழுதி ஒரு ஓலையை தன் தந்தையிடம் தந்தான். அதனை அவன் வாசித்துப் பார்த்தான், அவன் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது.

"தூயமணி, நான் சொல்லியது சரியாகி விட்டது!"

"யாரிடமிருந்து ஓலை வந்திருக்கிறது?"

"இசையொலி இடமிருந்து! நம் திட்டத்தின் படி நடக்க வஞ்சி இசைந்து விட்டாள்! இன்னும் இரண்டு நாட்களில் இசையொலியோடு வஞ்சியும் இங்கே வருகிருளாம்!"

"உண்மையாகவா? வஞ்சியும் வருகிருளா?"

"உனக்கேன் ஐயம்! நீயே படித்துப் பார்!" என்று ஓலையைத் தந்து விட்டு, ஏதோ யோசனையில் கிழவன் ஆழ்ந்துவிட்டான்!

படித்துப் பார்த்ததும் தூயமணியின் உள்ளம் மகிழ்ச்சியினுல் துள்ளிக் குதித்தது! அவளிடம் என்ன என்ன பேசவேண்டும்; எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்றெல்லாம் மனக்கோட்டை கட்ட ஆரம்பித்து விட்டான்! கொக்கு மந்தாரை மரத்தின் அடியில் இருவரும் தனித்து நீண்டநேரம் இன்பமாகப்

பேச வேண்டுமென்று ஆசைப் பட்டான்! மாலை இட்டு மகிழத் துடித்தான்! ஆனால் அவனை "வஞ்சியடிகள்" ஆக்க மருதவாணன் தீர்மானித்து விட்டான், சிறிதுநேர சிந்தனைக்குப் பிறகு!

(தொடரும்)

---

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யாக சேரமறுப்பது போலவும் பர்மாவின் பிரதமர் அடிக்கடி கூறிவருகிறார். இருந்தாலும், இங்கிலாந்தின் மீது பர்மாவிற்கு இருக்கும் காதலிலும் எந்தவித மாற்றமும் இதுவரை உண்டாகவில்லை. பர்மாவிற்கு இங்கிலாந்து பண உதவி செய்து கொண்டும் இருக்கிறது. காமன்வெல்த்தில் பர்மா சேருவதைக் காட்டிலும் சேராமல் இருப்பதால் இங்கிலாந்திற்கு அதிக நன்மை இருக்கின்ற காரணத்தால் தான், சேருமாறு பர்மாவை வற்புறுத்தாமல் இங்கிலாந்தும் இருக்கிறது என்று யூகிக்க வேண்டியதாக இருக்கிறது.

அண்டையிலுள்ள இந்தியாவுடனும், சிலோன் தீவுடனும் நெருங்கியத் தொடர்புகொண்டிருக்கவேண்டிய நிலையில் உள்ள பர்மா, இந்த இரு நாடுகளும் சேர்ந்துள்ள காமன்வெல்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டு, இங்கிலாந்துடன் மட்டும் தனித்த முறையில் கொஞ்சுவதற்கு சரியான விளக்கம் வேண்டும். காமன்வெல்த்துடன் கலந்துகொள்வதானால் நாட்டின் சுயாட்சித் தன்மைக்குப் பாதகம் அதிகம் நேர்ந்துவிடப் போவதில்லை. அப்படி இருந்தும், பர்மா காமன்வெல்த்தில் பங்குபெற மறுக்கிறது. இத்துறையில் இங்கிலாந்தும் வற்புறுத்தாமல் இருக்கிறது. இதற்கு என்ன பொருள்?

பர்மாவைத் தனித்திருக்க விட்டுவிட்டு, அந்த நாட்டைச் சுரண்ட இங்கிலாந்து திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. எது எப்படியானாலும் பர்மா மக்களின் விடுதலைப்போர் இன்னும் ஒரு தொடர்கதையாகவே இருந்துவருகிறது என்பதில் சந்தேகமில்லை.

* * *

விடுதலை, மக்கள் விழிப்புணர்ச்சியோடு என்றென்றும் இருந்து முன்னெச்சரிக்கையோடு பாதுகாத்து வரப்படவேண்டிய ஒரு உன்னதமான கோட்பாடு ஆகும். பிற நாட்டார் கவர்ந்து கொள்வார்களே என்செய்வது என்று பயங்கொண்டு படையைப் பெருக்கிக்கொண்டே போவதைவிட, மக்கள் பெயர் கூறி மன்றமேறியுள்ளோர், அப்படையின் துணைகொண்டு, விடுதலைப்பயிரை மேய்ந்துவிடும் மூர்க்கர்களாக மாறிவிடாமல் விழிப்பாக இருக்கவேண்டியது மக்களின் பெரும் பொறுப்பாகும். கொஞ்சம் கண்ணயர்ந்தாலும், சில நிமிஷம் அலட்சியப் படுத்தினாலும் நமது விடுதலை உணர்வை நசுக்கி நாசம் செய்யும் தீயவர்களாக தூயவர்களும் மாறிவிடுவர். விடுதலைப் பாதை, மனிதசமுதாயம் உள்ள வரையில் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் நற்பாதையாகும். மக்கள் உள்ளத்திலே இயற்கையாக உள்ள விடுதலை உணர்வு மங்கினால், பாதையும் பழுதடையும். உள்ளத்திலே அவ்வொளி வீசிக்கொண்டே இருந்தால், பாதையும் செம்மையானதாக இருந்து வரும்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லாந்தின் நேசத்தை சித்தரித்துக் காட்டிய தலைவருக்கு, சோவியத் நாட்டைக் குறித்து இரண்டொரு வார்த்தை கூறக்கூட நினைப்பில்லை. நெருப்பென்றாலே வாய் சுட்டுவிடுமோ என்னவோ!

ரூபிள் உலகம், டாலர் உலகம் என்று இரு முகாம்களாக உலகம் பிரிந்திருக்கும் இந்நிலையில், இரண்டு அணிகளிலும் சேராமல், தனி ஏர் ஓட்ட விழைவதாகப் பெருமையாகப் பேசிக்கொள்ளும் இந்தியக் குடியரசின் தலைவர், வாய் உபசாரமாகவாவது 'சோவியத்' என்று கூற மறந்ததேன். இது ஏதோ, எதிர்பாராத முறையில் நிகழ்ந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. வேண்டுமென்றே தலைவர், சோவியத் பெயரைக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார். இதனைத் தவறென்றோ, இது கண்டிக்கப்படக்கூடியதென்பதோ நமது கோட்பாடு அன்று. ஆனால், இந்தியா பேசும் நடு நிலைமையை உலகம் சந்தேகிக்குமே என்பதோடு, நேர்மதியாளர்களின் சிந்தனையும் ஐயம் கொள்ளுமே என்பது தான் நமது கவலை.

புதிய அரசியலின்படி நிறுவப்பட்டுள்ள குடியரசில் எதிர்கால போக்கில் எந்த வித மாற்றமும் இருக்கப் போவதில்லை என்பதும், ஏகாதிபத்தியம் எந்த அடிப்படையில், எந்தெந்த வித முறைகளினால் இந்த நாட்டை ஆண்டுவந்ததோ, அதே ரீதியில் தான் குடியரசும் நடக்க இருக்கிறது என்பதையும், தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் சொற்பெருக்கு விளக்கமாக்கி இருக்கிறதற்காக, நாம் அனைவரும் தலைவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். குடியரசின் நடைமுறை கோட்பாட்டை விளக்குவதில் தலைவர் என்ற நிலையில் இருந்து, தமக்குரிய பங்கை நிறைவேற்றிய டாக்டரை நாம் மனமாரப் போற்றுகிறோம்.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டை நிர்மாணித்தாகவேண்டும் அந்த இடத்தில்.

இன்றுள்ள சமுதாயத்தின் அமைப்பின் விவரம் என்ன—விளக்கம் என்ன? பலர் உழைக்கிறார்கள் அவர்கள் உழைப்பனைத்தையும் சிலர் உண்டு கொழுக்கிறார்கள். அந்தப் பாட்டாளிகள் உழைத்துவிட்டு, தங்கள் உழைப்பின் முழுப்பயனையும் பெறாமல், ஏமாந்த மிருக நிலையில் காலம் கழிக்கிறார்கள். நஞ்செய் புஞ்செய் நிலம் நாடெங்கும் பரவி இருக்கிறது. அதில் பாடுபட தேவைக் கதிகமாகவே உழவர்கள் இருக்கிறார்கள். உற்சாகத்தோடு உழைக்கிறார்கள். ஆனால், உருவாக்கப்பட்ட பலனை மட்டும் அவர்கள் தொட முடியாமல், ஊர்ந்து செல்லும ஜீவன்கள்போல உள்ளம் நொந்து காலம் கழிக்கிறார்கள். தினம்தினம் நிமிஷம் தவறாமல் தொழில் செய்கிறார்கள். உழைப்பின் பயனைக் குவிக்கிறார்கள். அது விற்பனையாகாமல் தவிக்கிறார்கள். தொழிலை இழக்கிறார்கள். மனம் உடைகிறார்கள். வறுமையை வாய்மூடி வரவேற்று சீரழிகிறார்கள்.

'உற்பத்தியைப் பெருக்குங்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்!' என்று கனத்த குரல் பல கிளப்பப்படும் அதே பொழுதில்தான், 'வேலை கொடுங்கள்! வேலைகொடுங்கள்!' என்ற வேதனை விம்மலும் கேட்கிறது. ஆனால், அவர்கள் உழைப்பைக் குறைந்த பட்ச விலையாவது கொடுத்து வாங்குபவர்களைக் காணோம். இதன் முரண்பாடு சிலருக்குத் தெரிகிறது. இதற்கான காரணத்தைச் சிலர் ஆராய்ந்து பார்க்கிறார்கள். இதற்கான பரிகாரத்தைச் சிலர் துணிந்து கூறுகிறார்கள். பலர் 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்று பாடுகிறார்கள்! ஆளவந்தார்களோ, அனைத்தையும் அலட்சியப் படுத்திவிட்டு, "இது நம்மவர் ஆட்சி! அடங்கி ஒடுங்கி நடங்கள்! சில நாள்சென்றதும் சீராகி விடும்!" என்று சீறுகிறார்கள், அவர்கள் இருந்துவரும் பீடத்தின் மகிமையால்!

தொழிற்சாலைகள் — உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள்—விரல் விட்டு எண்ணக் கூடிய சிலருக்கே சொந்தமாகும். நாட்டில் உள்ள சாகுபடியாகும் நிலங்களுக்கும் அதில் உழைக்கும் உழவர்களுக்கும் எந்தவித பாத்தியதையும் கிடையாது. நிலச் சொந்தக்காரர்கள் என்ற சில காட்டு ராஜாக்கள் கோலாகல வாழ்வில் காலங்கழித்து வருகின்றனர். வேலையில்லாதோர் பட்டாளம் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் கூடிக் கொண்டு வருகிறது. புத்திர பாக்கியத்திற்கோ பஞ்சமில்லை ஏழைக்கு. வறுமையும பிள்ளைப்பேறும் போட்டியிட்டுக் கொண்டு இருக்கிறது.

வேலையற்றோருக்கு வேலைதேடித் தரவும், தொழில் செய்து வருவோரை வெளியே விரட்டாமல் பார்த்துக் கொள்ளவும், உழவர்களுக்கு உழவுத் தொழில் செய்ய நிலம் உதவவும இச் சூழ்நிலையில் ஊராள வந்தோர் முன்வர வேண்டும. நிலப்பிரபுத்துவ முறையும் முதலாளித்துவ அமைப்பும் இதற்கு இடைஞ்சலாக இருக்கின்றன. உழவனை உறிஞ்சிக் கொழுப்பது நிலச்சுவானின் சட்டப்படி அமைந்த உரிமையாக இருக்கிறது. தொழிலாளியின் தொழிலின் பெரும் பகுதியைப் பணமாக்குவது முதலாளியின் போக்காக இருக்கிறது. இந்தச் சுரண்டல் முறைக்கு முடிவு கட்டினால் தான், காங்கிரஸ் மேலிடத்தாரின் அருமையான கோட்பாடு நிறைவேற வழி ஏற்படும். அவர்கள் தேன்மொழியிலும் நாணயம் இருப்பதாகப் பொருள்படும்.

எல்லோருக்கும் வேலை—எல்லோருக்கும் உணவு—எல்லோருக்கும் குடியிருக்கும் இடம்—எல்லோருக்கும் ஆடை—எல்லோருக்கும் வாழ்க்கைத்தர உயர்வு—என்றெல்லாம பாகுமொழி கூறுவது காங்கிரஸ் மேலிடத்தாரால் மட்டுமே சாத்தியமாகக் கூடியது என்று எண்ணக் கூடாது. எல்லோராலுமே இவ்வாறு கூறுவது இலகுவான காரியமே.

இன்றைய உலக நிலையில், முதலாளித்துவத்திற்கு நல்லதோர் எதிர்காலம் இல்லை. முதலாளிக்குப் பணவேட்டையில் கண். தொழிலாளிக்குப் பசி போக்கிக் கொள்வதில் குறி. முதலாளிக்குப் போரிலே பிரியம். பாட்டாளிக்கு அமைதியிலே ஆசை. முதலாளிக்குப் பிறரைச் சுரண்டுவதிலே பிரேமை. உழைப்பதனிக்குப் பிறருக்குழைப்பதிலே உற்சாகம். முதலாளி பிறரை இம்சிப்பதிலே இன்பம் காண்போன். தொழிலாளி பிறர் மகிழ்வது கண்டு ஆனந்திப்போன். முதலாளி சுயநல சொரூபி. தொழிலாளி தந்நலமற்ற தியாகி.

இந்த அடிப்படைப் பாகுபாட்டால் நாட்டின் செல்வநிலை நாளுக்கு நாள் தேய்ந்து வருவதையும், இன்றைய சமுதாய ஏற்பாட்டை அப்படியே வைத்துக் கொண்டு, இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்வளிப்பது முடியாத காரியம் என்பதையும், ஆள வந்தார்கள் உள்பட அனைவரும் அனுபவ வாயிலாக அறிந்தே இருக்கிறார்கள். மறுக்க முடியாத இந்த உண்மை விளக்கமாகத் தெரிந்தும் கூட, இவ்வமைப்புமுறையை உடைத்தெறிந்து விட்டு, வேறு தேவையானதும், முன்னால் வாக்குறுதியாகத் தரப்பட்டதுமான, மக்களுக்குச் செல்வச் சிறப்பளிக்கும் நல்லதோர் ஏற்பாட்டை ஏற்படுத்த நல்லெண்ணம் கொள்ளவில்லை காங்கிரஸ் ஆளவந்தார்கள். ஆனால்! பேசமட்டும் செய்கிறார்கள் அது இது என்று.

இருக்கும் வயல்களையும், தொழிற்சாலைகளையும், அதன் அதன் சொந்தக்காரர்களிடமே விட்டுவிட்டு, புதிய குடியாட்சிச் சட்டத்தில் அதற்கான விசேஷ பாதுகாப்பும் அளித்துவிட்டு, சுரண்டலுக்கும் பணவேட்டைக்கும் சட்டப்படி உரிமை வழங்கிவிட்டு, "பசி போக்குவோம் பாரீர் — பட்டினியை விரட்டுவோம் கேளீர்—வாழ்க்கைத்தரம் தருவோம் தெரிவீர் — வறுமையை ஒழிப்போம் காணீர்—மடமையை நீக்குவோம் அறிவீர் —மனிதப் பண்பை வளர்ப்போம் வாரீர்—செல்வத்தைக் குவிப்போம் ஜெகத்தினரே சேர வந்து உங்கள் ஒத்துழைப்பைத் தாரீர்" என்று தேனினும் தித்திக்கும் சித்திரச் சொற்களை, மக்கள் காது செவிடாகும் படியாகப் பேசுவது எதற்கு?

இந்த மூன்று ஆண்டில் இவர்கள் சாதித்தவைகள் எவை எவை? போட்ட திட்டங்கள் பலவும் என்ன ஆயின? தொழிலைப் பரவலாக்குவோம், கூட்டுறவை வளர்ப்போம் என்று பசப்பும் இவர்கள், அதிகாரத்தை ஒரே இடத்தில், அதாவது டெல்லியில் சேர்ப்பதில் ஆத்திரம்

காட்டி வெற்றி பெற்றது எதற்கு? பிற மாவட்டங்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை இழந்து, பிற வட்டாரங்கள் மீது சந்தேகங் கொண்டு, முழு அதிகாரமும் தங்கள் கையிலேயே இருக்கப் பார்த்துக் கொண்ட காங்கிரஸ் மேலிடம் செல்வத்துறையில் மட்டும், தொழிலைப் பரவலாக்கவும் கூட்டுறவு முறையைப் போற்றவும் செய்யுமா என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும். அரசியலிலே ஒரு போக்கும், அதற்கு நேர்முரணான போக்கை பொருளாதாரத் துறையிலும் மேற்கொள்வது என்பது ஊற்றுக்கு நிற்காத வாதமாகும். பொருளாதார அமைப்பை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படுவதுதான் அரசியல் ஏற்பாடு என்பது மறுக்கமுடியாத — மறைக்க முடியாத உண்மை தத்துவமாகும்.

இன்றுள்ள சமுதாய அமைப்பின் அருட்பிரசாதத்தால் கிடைத்ததுதான் வேலையின்மை, வறுமை, பஞ்சம், பட்டினி, மடைமை, அனைத்தும். இந்த அமைப்பு முறையை பாதுகாத்துக் கொண்டே, எல்லா மக்களுக்கும் நல்வாழ்வு தரப்போகிறோம், அதுவும் குறுகிய காலத்துக்குள் என்று பேசுவது, வாயால் கூறியதைச் செயலாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் உடையவர்கள் செய்கின்ற காரியமாக இருக்க முடியாது. ஜுர நோயை அப்படியே வைத்துக் கொண்டு, அதன் அறிகுறிகளான வாய்கசப்பு—சோர்வு — பசியின்மை ஆகியவற்றைப் போக்க முயற்சிக்கும் பெரியவனைத் தேர்ந்த மருத்துவன் என்று எவரும் கூறார். மூலநோயைப் போக்கினால் தான், அதனால் உண்டானவிரும்பத்தகாதவிளைவுகளையும் நீக்கமுடியும். இந்த அரிச்சுவடியை மறந்துவிட்டோ, வேண்டுமென்றே மறந்திருப்பதுபோல் பாவனை செய்தோ, காங்கிரஸ் மேலிடத்தார், அனைவரின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் திட்டம் தீட்டுவது பிறரை ஏமாளிகள் என்று எண்ணிக்கொண்டு, செய்யப் படும் ஆணவத்தின் சிகரமாகும்.

மேலிடத்தாரை அறியாதவர்கள் என்று சொல்வது முழுதும்பொருந்தாது. அறிந்தே, அமுல் நடத்த முடியாத இந்தத் திட்டத்தைத் தீட்டிக் காட்டுகிறார்கள் கவர்ச்சி தரும் சொற்களால். வரப்போகும் தேர்தலைக் குறியாகக் கொண்டு தீட்டப்பட்டுள்ள திட்டமேயாகும் இது, அரியாசனத்தில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி தனது அதிகாரத்தை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் தந்திரப் பேச்சே இது. சிந்தனையாளர்கள் இத்திட்டத்தின் முரண்பாட்டை பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்.

இத்திட்டத்தால் புதிய ஏற்பாடு அல்லது ஒரு புதிய சமுதாயத்தைக் காணமுடியாது போனாலும், மக்களின் குடி உரிமைகளை பறிக்கவும், அடக்குமுறைகளை அதிகரிக்கவும், ஏனென்றால் சிறைவாசம் இம்மென்றால் வனவாசம் என்று பயங்கர ஆட்சி நடத்தவும், போலீஸ் படையைப் பெருக்கவும், பட்டாளத்தை பலம் பொருந்தியதாக ஆக்கவும், அதிகாரபீடம் தம்மைவிட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளவும், அழிவுப் பாதையில் நாட்டை இட்டுச் செல்லவும், சொல்லளவில் உள்ள ஜனநாயகத்துக்கும் சமாதி கட்டிவிட்டு, சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தவும், உறுதியாக முடியும் என்பதில் சந்தேகமில்லை.

மக்களாட்சி தத்துவப்படி அமைந்ததாகக் கூறப்பட்ட ஜெர்மன் அரசியல் அமைப்பின் மூலந்தான் ஹிட்லர் என்னும் சர்வாதிகாரி ஆட்சிபீடம் ஏறினான். தொழில் வளர்ச்சி—தொழில் முன்னேற்றம்—என்ற பெயர் கூறிதான் ஜப்பான் போர்க்களப் பாதையில் புகுந்தது. அந்தக் காலத்தில் ஜெர்மனியிலும் ஜப்பானிலும் இருந்தது போன்ற செல்வச் சீரழிவுதான், இன்று, இத்துணைக் கண்டத்திலும் இருந்து வருகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பலம் பொருந்திய ஒரே ஒரு அரசியல் கட்சிதான் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு பலம் பெற்றிருந்தது அங்கும். ஜெர்மனியில் பலம் பொருந்திய சோஷலிஸ்ட் கட்சியையும், கம்யூனிஸ்ட் கட்சியையும், நாஜிக்கட்சியினரால் 'தேசகவுரவும்' என்ற பெயர் கூறி ஒழித்துக் கட்ட முடிந்தது. இந்த நாட்டில் அப்படி கூறிக் கொள்வதற்கு மில்லை. இங்கு எதிர் கட்சியே இன்னும் உருவாகவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியோ, அதிகப் படியான அடக்க முறைகளுக்கு வலி அழைப்பனுப்பும் விஷப் பரீட்சையில் ஈடுபட்டிருக்கிறது. சோஷலிஸ்ட் கட்சிக்கோ, தெளிவுமில்லை துணிவுமில்லை. ஹிந்துமகா சபையோ போர்ப் பாதையை வகுத்துக் கொண்டிருக்கும் பாசிசப் பேயாகக் காட்சி அளிக்கிறது. காங்கிரஸ் மேலிடத்திற் எல்லா விஷயத்திலும் பிரை விழுந்து கொண்டே இருக்கிறது. எனவே, அடுத்தத் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு, ஆகா திட்டத்தைத் தீட்டித் தருகிறது நாட்டு மக்களுக்கு. இதன் பொருந்தாக் கூற்றை விளக்கிக் கூறி, மக்களுக்கு விழிப்பேற் படுத்துவதே நமது பொறுப்பான பணியாகக் கொள்ளுவோம் நாம், மக்களுக்கு விஷய விளக்கம் மிக மிகத் தேவை. காங்கிரஸ் மேலிடம் தீட்டியுள்ள திட்டம் தேன்போன்ற சொற்களால் ஆனதுதான்; ஆனால் தேள் கொட்டும் வேதனை உண்டு அதில் என்று விளக்குவோம்.

---


## புதிய புத்தகங்கள் !!

| | |
|---|---|
| அண்ணாவின் சொல்வன்மை | 0 5 |
| விடியுமா | 1 0 |
| உலகமேதைகள் | 1 8 |
| அன்பழகன் ஆட்சி | 1 4 |
| தேவலீலைகள் | 8 0 |
| அண்ணாப் பேச்சு | |
| வெற்றி ரகசியம் | 0 3 |
| அண்ணாவின் அறைகூவல் | 0 3 |
| திருக்குறல் ஆராய்ச்சி | 1 8 |
| வள்ளுவர் தகாள்கையும் வடவர் கொள்கையும் | 1 0 |
| புதுமைக் குறள் | 1 0 |

[தபாற்செலவு தனி]

பகுத்தறிவுப் பாசறை

147 பவழக்காரத் தெரு,

சென்னை 1.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon